

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் 4ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் மாலை ராஜா, லெட்சுமணன், முருகன், சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், அண்ணாதுரை, துபாய் சாகுல், செல்வபாபு, மீரான் மைதீன், அனித்தா, நவநீதன், ரேவதி அசோக், தேவிகா, அருணாசலதேவி, சபி அமீர்பாத் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., ஒன்றியக் குழுத் தலைவர்கள் திவ்யா மணிகண்டன், காவேரி சீனித்துரை, போக்குவரத்து துணை ஆணையர் ரவிச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

### சிவகாசி, கிருஷ்ணகிரி, கடலூர் மாவட்டங்களில்

# அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் - உபகரணங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, மார்ச் 8-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சிவகாசி அரசு மருத்துவமனையில் ரூ.32.55 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் - கட்டுதல், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவக் கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் - நிறுவுதல் மற்றும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.18 கோடி மதிப்பீட்டில், 50 படுக்கைகள் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவுக் கட்டிடம் - கட்டுதல் தொடர்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை வருமாறு:-

**சிவகாசியில் கூடுதல் கட்டிடம்**

சிவகாசியின் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்காகவும், தீக்காயங்கள், சுவாச பிரச்சினைகள், மகப்பேறு மற்றும் அவசரகால சிகிச்சை சேவைகளை மேம்படுத்த, சிவகாசி அரசு மருத்துவமனையில் மொத்தம் 70,970 சதுர அடி பரப்பளவில் ரூ.28.80 கோடி செலவில் புதிய தரைத்தளத்துடன் கூடிய 6 மாடி கட்டிடமும், ரூ.3.75 கோடியில் மருத்துவ உபகரணங்களும் ஆக மொத்தம் ரூ.32.55 கோடி செலவில் அவசர சேவைகள், அவசர சிகிச்சைப் பிரிவு, சிறப்பு தாய் சேய் சுகாதார பிரிவு, மேம்பட்ட அறுவை சிகிச்சை வசதிகள், நோயாளி பராமரிப்பு படுக்கைகள் மற்றும் நவீன ஆய்வகம் உள்ளிட்ட அதிநவீன வசதிகள் இடம்பெறும்.

இக்கட்டிடத்தில் தரைத் தளத்தில் புறநோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, அவசர அறுவை சிகிச்சை அரங்கம், கதிரியக்க சேவைகள் மற்றும் மருந்தகம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் தாய் சேய் நல பிரிவு, அனைத்து சேவை பிரிவு, ஆய்வகம், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பிரிவு, பிரசவ அறைகள், மருத்துவ சோதனை பிரிவு, கர்ப்பிணிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய வசதிகளும், இரண்டாவது தளத்தில் தாய்ப்பால் வங்கி, அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்புப் பிரிவு, அறுவை சிகிச்சை ஆயத்த அறைகள், கண்காணிப்பு மற்றும் பராமரிப்புப் பிரிவு மற்றும் இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள் ஆகிய வசதிகளும், மூன்றாவது தளத்தில் ஆண்களுக்கான அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்புப் பிரிவு, இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள், அறுவை சிகிச்சை ஆயத்த அறைகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு பிரிவு ஆகிய வசதிகளும், நான்காவது தளத்தில் பேறுகால முன் மற்றும் பின் கவனிப்புப் பரிவுகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகிய வசதிகளும், ஐந்தாவது தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு, பெண்கள் பிரிவுகள் - அறைகள் சிகிச்சைக்குப் பின் பராமரிப்பு வார்டு, நோயாளிகள் காத்திருப்பு அறை மற்றும் சமையலறை ஆகிய வசதிகளும், ஆறாவது தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆண்கள் பிரிவுகள் - அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்பு பிரிவுகள், நோயாளி காத்திருப்பு பிரிவு மற்றும் சமையலறை ஆகிய வசதிகள் உள்ளது.

மேலும் இந்த புதிய கட்டிடம் சிவகாசி அரசு மருத்துவமனையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு தேவையான மகப்பேறு மற்றும் அவசரகால மருத்துவத் தேவைகளை வழங்க ஏதுவாக அமையும்.

**கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவ கட்டிடம் அமைக்க மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணை வழங்கப்பட்டு ரூ.20 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதி உதவியுடன் கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்காக அவசரகால சிகிச்சை சேவைகளை மேம்படுத்த, தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மொத்தம் 44,930 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய தரைத்தளத்துடன் கூடிய 2 மாடி கட்டிடம் ரூ.20 கோடி செலவில் கட்டப்படும். இதில் அவசர சேவைகள், அவசரகால சிகிச்சைப் பிரிவு, மேம்பட்ட அறுவை சிகிச்சை வசதிகள், நோயாளி பராமரிப்பு படுக்கைகள், இரத்த சுத்திகரிப்பு பிரிவு, கதிரியக்க சேவை மற்றும் இரத்த வங்கி உள்ளிட்ட நவீன வசதிகள் இடம்பெறும்.

இக்கட்டிடத்தில் தரைத் தளத்தில் புறநோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, கதிரியக்க சேவைகள், தீவிர சிகிச்சை பராமரிப்புப் பிரிவு, மருந்தகம் மற்றும் அவசரகால அறுவை சிகிச்சை அரங்கம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்புப் பிரிவு, அறுவை சிகிச்சை ஆயத்த அறைகள், தீவிர சிகிச்சை பிரிவு, மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கான அறைகள் ஆகிய வசதிகளும், இரண்டாம் தளத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உள்நோயாளிகள் பிரிவு, தனிமைப்படுத்தப்பட்ட அறை, இரத்த சுத்திகரிப்பு பிரிவு, பகல் நேர கண்காணிப்பு பிரிவு மற்றும் மருத்துவ ஆய்வகம் ஆகிய வசதிகள் உள்ளது. மேலும் இந்த புதிய கட்டிடம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு தேவையான அவசரகால மருத்துவத் தேவைகளை வழங்க ஏதுவாக அமையும்.

**கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் வசதிக் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவுக் கட்டிடம்**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் வசதி கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.18 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதி உதவியுடம் கட்டப்படும். இக்கட்டிடம் தரைத்தளத்துடன் கூடிய இரண்டு தளங்களுடன் மொத்தம் 3558.47 சதுர மீட்டர் பரப்பளவில் (38621 சதுர அடி) அமையப்படவுள்ளது.

இக்கட்டிடத்தில் தரைதளத்தில் அவசர மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகள், மருந்தகம், சி.டி.ஸ்கேன், ஊடுருவும் கதிர்கள், அல்ட்ரா சவுண்ட் கருவிகள், பதிவறை மற்றும் ஆய்வகம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் இருதய தீவிர சிகிச்சை பிரிவு, நரம்பியல் தீவிர சிகிச்சை பிரிவு பெண்களுக்கான தீவிர சிகிச்சை பிரிவு, இசிஜி அறை, மருத்துவ அலுவலர் அறை மற்றும் செவிலியர் அறை ஆகிய வசதிகளும், இரண்டாம் தளத்தில் இரண்டு அவசர அறுவை சிகிச்சை அரங்குகள், ஆண்களுக்கான தீவிர சிகிச்சை பிரிவு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர் அறை ஆகிய வசதிகள் உள்ளது. மேலும் புற காவல் நிலையம், அவசர ஊர்தி ஓட்டுநர்களுக்கான ஓய்வு அறை, அனைத்து தளங்களிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி கழிவறை, மின்தூக்கி மற்றும் சாய்வு தளம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பஹ்ரைன் நாட்டில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி - கழகத் தலைவருக்குப் புகழாரம்!

மனாமா (பஹ்ரைன்), மார்ச் 8 -

மார்ச்1, வெள்ளிக்கிழமை அன்று வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில் தலைநகர் மனாமாவில் உள்ள இந்தியன் கிளப்பில் மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் பொறுப்பாளர் முகமது ஹூசைன் மாலிம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுக தொண்டர்கள், தோழமை இயக்கத்தின் தோழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**திராவிட மாடல் ஆட்சி நாயகர்!**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால சாதனைகளை பற்றி பலரும் பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள்.

"ஏன் வேண்டும் திராவிட மாடல் ஆட்சி"? என்ற தலைப்பில் ஆலோசனைக் குழு தலைவர் கபீர் அகமது பேசுகையில், எல்லோருக்கும், எல்லாமும் கிடைத்திட இந்த திராவிட மாடல் ஆட்சி கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் தமிழ் நாட்டில் நிரந்திரமாக அமைய வேண்டும் என்று கூறினார்.

"மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின்" என்னும் தலைப்பில் துணைத் தலைவர் கருணாநிதி சண்முகம் பேசுகையில், நாட்டில் எழை எளிய மக்கள் பயன் பெரும் வகையில் புதிய பல திட்டங்களை திமுக அரசு தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். "தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி " என்ற தலைப்பில் பேசிய உறுப்பினர் சேர்க்கைச் செயலாளர் ஆபீத் அலி. "ஒட்டு மொத்த இந்தியாவின் வளர்ச்சியை விட தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சி மிக முன்னேறிய நிலையில் உள்ளது" என்று எடுத்துக் கூறி பேசினார்.

தலைமை உரை நிகழ்த்திய பொறுப்பாளர் முகமது ஹூசைன் மாலிம். 2024 நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றி பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். மேலும் சமூக வலைத் தளத்தில் தி.மு.க. தொண்டர்கள் தொடர்ந்து தி.மு.க ஆட்சியின் சாதனைகளை தொடர்ந்து பதிவு செய்வதுடன்.

வெளிநாடுகளில் வாழும் தொண்டர்கள், தாயகத்தில் வாழும் தங்களின் குடும்பத்தினர்களையும், நண்பர்களையும் தொடர்பு கொண்டு தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க கேட்டு கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி பேசினார்.

வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின், சவூதி அரேபியாவின் துணைப் பொறுப்பாளர் சந்தோஷ் கலந்து கொண்டு, திராவிட மாடல் ஆட்சி மகளிர்களுக்கு மிக பயனுள்ள பல திட்டங்களை தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். குடந்தை ஆரிப் பேசுகையில், "சமூக நீதியை நிலை நாட்டுவதில் முதல்வர் அவர்களின் இந்த திராவிட மாடல் மிகவும் உறுதியாக உள்ளது" என்றார்.

தக்கலை சாம் பேசும்போது, குடும்ப பெண்களுக்கான உரிமைத் தொகை வழங்குவது மூலம், பெண்களின் சுய மரியாதை காக்கப் படுகிறது என்பது எடுத்துக் கூறினார்.

தமிழரசன், சேகர், சோழகர் திருமேனி, அசரி துறை ஆகியோர் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார்கள். மேலும். இந்தியப் பள்ளியின் ஆட்சி மன்றக் குழுச் செயலாளர் ராஜ பாண்டியன், முத்து தீவு தமிழ் சங்கத்தின் செயலாளர் முகமது பைசல். த.மு.மு.க சார்பில் யூசுப் ராஜகிரி. முஸ்லிம் லீக் சார்பில் பேராசிரியர் சுலைமான். ஆகியோரும் கலந்து கொண்டு கழகத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

தொழிலாளர் நலத் துறை செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில் வரவேற்க துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்க, சமூக சேவைச் செயலாளர் மன்னை பிரபா நன்றி கூறினார்.

### முதல்வர் தொடங்கி வைத்த 'நீங்கள் நலமா' திட்டம் வரவேற்கத்தக்கது!

# இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 8 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த 'நீங்கள் நலமா' திட்டத்தின் மூலம் இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை என தினத்தந்தி நாளிதழ் தலையங்கத்தில் 6.3.2024 அன்று பாராட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு : -

"நீங்கள் நலமா?" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு அரசு பல திட்டங்களை மக்களுக்காக தீட்டி அறிவித்து வருகிறது. ஆனால், இந்த திட்டத்தின் பயன்களெல்லாம் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கும் போய் சேர்வதில்தான் அதன் வெற்றி இருக்கிறது. யாருக்காக இந்த திட்டங்கள் தீட்டப்படுகிறதோ, அவர்களுக்கு சிந்தாமல் சிதறாமல் போய் சேர்ந்தால் தான், அந்த திட்டம் போடப்பட்டதின் நோக்கம்நிறைவேறுவதாக இருக்கும்.

மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி, இந்த பொருள் குறித்து 1985ல் பேசியது இன்றளவும் வழிகாட்டியாக இருக்கிறது. "சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலனுக்காக அரசு ஒரு ரூபாய் செலவழித்தால், அது




யாருக்கு போய் சேர வேண்டுமோ? அவர்களுக்கு 15 காசுதான் பலனாக கிடைக்கிறது" என்று பிரதமரே கூறியது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த கருத்து சுப்ரீம் கோர்ட்டிலும் பல ஆண்டுகளுக்கு பிறகு மேற்கோளாக ஒரு வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது நீதிபதி, "இந்த கருத்தை ராஜீவ்காந்தி கூறி 32 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நிலைமை மாறவில்லை என்பதுபோல தெரிகிறது" என்றார்.

அப்போது மட்டுமல்ல, இப்போதும் இந்தநிலை ஆங்காங்கு நடப்பது கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆதரவற்ற முதியோருக்கு தமிழ்நாடுஅரசு உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கிவருகிறது.

சில புல்லுருவிகள் இந்த தொகையையும் கையாடல் செய்ததாக சமீபத்தில் செய்தி வெளியாகியுள்ளது அதிர்ச்சியை அளிக்கிறது. முதியோர் வங்கிக் கணக்குக்கு போக வேண்டிய இந்த ஆயிரம் ரூபாயை வேறு ஒரு தனி நபர் கணக்குக்கு பரிமாற்றம் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுபோல, தமிழ்நாடுஅரசு பல நலத்திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றி வருகிறது. ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை அனுப்பப்படுகிறது. புதுமைப்பெண் திட்டத்தில் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 போய் சேர்கிறது. இதுபோல, பல உதவித்தொகைகள் அனுப்பப் படுகிறது. பல நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசின் பல திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது மக்களுடன் நேரடி தொடர்புகொண்டு நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளார்.

'மக்களை தேடி மருத்துவம்', 'இல்லம் தேடி கல்வி', 'உங்கள் ஊரில் கலெக்டர்' என்பது போல, மக்களுக்கான திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கு போய் சேர்கிறதா? என்பதை உறுதி செய்யும் வகையில், "நீங்கள் நலமா?" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார். நீங்கள் நலமா? திட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட அனைத்து அமைச்சர்கள், தலைமை செயலாளர், அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், மாவட்ட கலெக்டர்கள் என அனைத்து அதிகாரிகளும் பொதுமக்களோடு, அவர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "நீங்கள் நலமா?" என்று கேட்டு, அரசின் நலத்திட்டங்கள், அரசால் நிறைவேற்றப்படும் சேவைகள் பற்றியும், அது வந்து சேர்கிறதா? என்பது உள்பட கருத்துகளை கேட்கப்போகிறார்கள்.

இது ஒரு நல்ல திட்டம், வரவேற்கத் தகுந்த திட்டம், பாராட்டத்தக்க திட்டம். இனி பொதுமக்களிடம் இருந்து எட்டாதூரத்தில்யாரும்இல்லை. முதல் அமைச்சரே பொதுமக்களிடம் நீங்கள் நலமா? திட்டத்தின் மூலம் நேரடியாக தொடர்புகொள்வது, அரசு அதிகாரிகளையும் தொடர்புகொள்ள வைக்கும். எந்த திட்டத்திலும் முறைகேடு நடக்காமல், அனைத்து ஓட்டைகளையும் அடைக்க வைக்கவும், அனைத்து பலன்களும் மக்களுக்கு நேரடியாக போய் சேரவும் இது உதவியாக இருக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தென்காசி வடக்கு மாவட்டம்

## சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியச் செயலாளர் மாரிமுத்து அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **நா.வெள்ளத்துரை** (1/544, பெருமாள் கோவில் தெரு, கரிவலம்வந்த நல்லூர், தென்காசி மாவட்டம்) அவர்கள் சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### தேனி தெற்கு மாவட்டம்

## கம்பம் ஒன்றியம், க.புதுப்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், கம்பம் ஒன்றியம், க.புதுப்பட்டி பேரூர்ச் செயலாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக, **எம்.டி. எம்.பார்த்திபன்** (89, பஞ்சாயத்து போர்டு தெரு, க.புதுப்பட்டி & அஞ்சல், தேனி மாவட்டம்) அவர்கள் க.புதுப்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாள் விழா 1-03-2024 அன்று துபாய் "லேன்ட்மார்க் ஹோட்டல் பனியாஸ் ஸ்கொயர்" வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அயலக தமிழர் வாரிய உறுப்பினரும்,அமீரக திமுக பொறுப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை ஏஜிஎம் பைரோஸ்கான் தொகுத்து வழங்கினார்.



தேனி வடக்கு மாவட்டம் போடிநாயக்கனூர் நகராட்சி 19வது பகுதியில் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் திட்டப் பணிகளை தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் துவக்கி வைத்தார். உடன் நகரமன்றத் தலைவர் ராஜ ராஜேஸ்வரி சங்கர், நகரச் செயலாளர் புருஷோத்தமன், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் மற்றும் நகரமன்ற துணைத் தலைவர், 19 வது பகுதி நகரமன்ற உறுப்பினர் எஸ்.வெங்கடேஷ்குமார், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.